DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.335/2005**

**P.W.3**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | நெல்சன் |
| Father Name | : | ஸ்டாலின் ஸாம்ராஜ் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.08.2025.

(6 மற்றும் 7 எதிரிகள் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 மற்றும் 4 எதிரிகள் இறந்துவிட்டனர் )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது தாம்பரம் மாநகர காவல் தாம்பரம் சரக உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.06.2001ம் தேதி திடீர் நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது, நிலைய குற்ற எண்.816/2001 இதச பிரிவு 341, 188, 143 மற்றும் 7(1)(a) of CLA Act வழக்கின் எதிரிகளான மாறன், செல்வம், பிச்சை, நேரு, பர்மா கண்ணன், கணேசன், கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களை காவல் ஆய்வாளர் **அ.சா.1** கிருஷ்ணன் அவர்கள் கைது செய்து, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.6, மதுரை அவர்களிடம் ஆஜர் செய்வதற்காக ஆய்வாளருக்கு உதவியாக நானும் மற்றொரு சார்பு ஆய்வாளர் சுந்தர்ராஜன் மற்றும் காவலர்கள் உடன் வந்த போது சுமார் 14.15 மணியளவில் மேற்படி எதிரிகள் நீதிமன்றத்திலுள்ள கதவு மற்றும் ஜன்னல்களை கைகளால் தாக்கி உடைத்து சேதம் விளைவித்தனர். அங்கு பாதுகாப்பில் இருந்த அப்போதைய அண்ணா நகர் காவல் நிலைய ஆய்வாளர் அ.சா.2 வானமாமலை என்பவரை எதிரி பர்மா கண்ணன் தாக்கியதில் ரத்தக்காயம் ஏற்பட்டது. மேற்படி எதிரிகளை

குறைந்த அளவு பலம் பிரயோஜனம் செய்து கட்டுக்குள் கொண்டு வந்தோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 6 மற்றும் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

சம்பவ தினத்தன்று திராவிட முன்னேற்ற கழக தலைவர் திரு.கருணாநிதி அவர்களை கைது செய்தது சம்பந்தமாக தமிழ்நாடு முழுவதும் தர்ணா, மறியல் நடந்தது என்றால் சரிதான். அது போல் மதுரையிலும் நடந்தது என்றால் சரிதான். கைதிகளை வழிக்காவலில் கொண்டு வரும் போது, கைதிகளால் மற்ற நபர்களுக்கும் மற்ற நபர்களால் கைதிகளுக்கும் ஊறு விளைவிக்காத வண்ணம் கொண்டு வர வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். அந்த நடைமுறையை பின்பற்றி தகுந்த பாதுகாப்புடன் கைதிகளை கொண்டு வந்தோம். சம்பவ தினத்தன்று மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்திற்கு மதுரை மாநகரத்திற்குட்பட்ட பல பகுதிகளிலிருந்து மறியல் செய்த நபர்களை நீதிமன்ற காவலுக்குட்படுத்த கொண்டு வந்திருந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேலும் அன்றைய தினத்தில் எந்தெந்த காவலர்கள் என்னென்ன பணிகளில் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்ற விவரம் காவல் நிலைய பொதுநாட்குறிப்பு, தனிப்பட்ட பாக்கெட் டயரி மற்றும் பாஸ்போட் ஆகியவற்றில் குறிக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அன்றைய தினத்தில் மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் காவல்துறை துணை ஆணையர் திரு.அமல்ராஜ் அவர்கள் தலைமையில் சுமார் 500 போலிசார், அலுவலர்கள் மற்றும் காவல் அதிகாரிகள் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தார்கள் என்றால் காவல்துறை துணை ஆணையர் திரு.அமல்ராஜ் அவர்கள் நீதிமன்ற வளாகத்தில் இருந்தாரா என்பது எனக்கு தெரியாது, ஆனால் சுமார் 10, 15 போலிசார் மேற்படி நீதிமன்ற வளாக பாதுகாப்பு பணியில் இருந்தார்கள். சம்பவ சமயத்தில் திரு.அமல்ராஜ் அவர்கள் மதுரை மாநகரில் சட்டம் ஒழுங்கு துணை ஆணையராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். அன்றைய தினம் மதுரை முழுவதும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி 15 போலிசார் மதுரை மாவட்ட நீதிமன்ற

வளாகத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவில்லை என்றும், சுமார் 500 போலிசார்கள் மாவட்ட நீதிமன்ற பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்றும் அதனை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சட்டப்பிரிவு 7(1)(a) of CLA Act என்பது குற்றம் செய்யவிடாமல் தடுப்பதற்கான சட்டப்பிரிவாகும். மேற்படி குற்ற எண்.816/2001 வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ தினத்தன்று எதிரிகளை நான் வழிக்காவலில் கொண்டு வரவில்லை என்றும், அந்த பணியில் நான் ஒருபோதும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் நீதிமன்ற சொத்துக்களை சேதப்படுத்தவில்லை என்றும், வழக்கிற்காக அவ்வாறு சேதப்படுத்தியதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நிகழவில்லை என்றும், நான் காவல் ஆய்வாளரின் வேண்டுகோளுக்கு இணங்க உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.